முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 121/2017

வா.ச.1- முருகேசன்

குறுக்கு விசாரணை 12-11-2021

தாவா சொத்து காலியிடம் என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தின் காலை எண் என்னால் குறிப்பிட இயலுமா என்றால் இயலும் .அது 365 ஆகும். உட்பிரிவு செய்யப்பட்டதற்கு பின்னிட்டு டவுன் சர்வே எண் என்ன என்றால் தெரியவில்லை. 2 ம் பிரதிவாதியின் சொத்தின் டவுன் சர்வே எண் என்ன என்றால் தெரியவில்லை. தாவா சொத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3 செண்ட் ஆகும். தாவா சொத்தின் நீள அகலம் எவ்வளவு என்றால் 22 x 60 ஆகும். கிழமேலடி 22 ஆகும். தென்வடலடி 60 ஆகும். தாவா சொத்துக்கும் நான் குடியிருக்கும் இடத்திற்கும் இடையே எத்தனை கிலோ மீட்டர் தூரம் இருக்கும் என்றால் 3 கிலோ மீட்டர் இருக்கும். தாவா சொத்தின் நான்கு எல்லைகளில் யார் இருந்து வருகிறார்கள் என்று என்னால் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் தாவா சொத்திற்கு வடபுறமாக முத்துச்சாமியின் வீடு உள்ளது. தென்புறமாக மாரப்ப கவுண்டர் வீடுள்ளது. கிழக்கு பக்கமாக ரோடுள்ளது. மேற்கு பக்கமாகவும் முத்துச்சாமி தான் உள்ளார். இந்த மேற்படி செக்குபந்தியை குறிப்பிட்டு தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஆமாம். வழக்கில் கூறியுள்ள செக்குபந்தி விவரமும் நான் கூறியுள்ள செக்குபந்தியும் வேறு வேறாக உள்ளது என்று சொன்னால் சரியல்ல. உண்மையில் தாவா சொத்து எனக்கு பாத்தியப்பட்டு நான் அனுபவத்தில் இருந்திருந்தால் நான் சரியான செக்குபந்தி விவரத்தை கூறியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டு இருந்தது என்றால் மாதவன் செட்டியாருக்கும் அவரது மகன் மாரப்ப செட்டியாருக்கும் பாத்தியப்பட்டிருந்தது. மாதவன் செட்டியாருக்கு எந்த தேதியில் எந்த ஆவணத்தின்படி மேற்படி சொத்து பாத்தியப்பட்டது என்றும் மாரப்பன் செட்டியாருக்கு எத்ந தேதியில் எந்த ஆவணத்தின்படி மேற்படி சொத்து பாத்தியப்பட்டது என்றால் மாதவன் செட்டியாருக்கு 1923 ம் வருடத்திய கிரய

பத்திரத்திரத்தின்படியும், மாரப்பன் செட்டியாருக்கு 1949 ம் வருடத்திய கிரய பத்திரத்தின்படியும் பாத்தியப்பட்டதாகும். இரண்டு ஆவணங்களின் தேதி மற்றும் மாதத்தை குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் மாதவன் செட்டியார் 01-07-1923 ம் தேதியும் மாரப்பன் செட்டியார் கிரயம் செய்த தேதி, மாதம் ஞாபகமில்லை.

01.07.1923 ம் தேதிய ஆவணத்தின்படி மாதவன் செட்டியாருக்கு எவ்வளவு பூமி பாத்தியப்பட்டது என்றால் 11.88 ஏக்கராகும். அதில் மாரப்ப செட்டியார் 5.1-2 ஏக்கர் கிரயம் பெற்றார். மாதவன் செட்டியாரும் மாரப்பன் செட்டியாரும் உயிருடன் இருந்த வரை ஒரே குடும்பமாக இருந்தார்களா என்றால் ஆமாம். இரண்டு சொத்துக்களுக்கும் யார் பெயரில்பட்டா இருந்தது என்றால் மாதவன் செட்டியார் பெயரில் இருந்தது. 5.1/2 ஏக்கர் சொத்துக்கு யார் பெயரில் பட்டா இருந்தது என்றால் மாரப்ப செட்டியார் பெயரில் இருந்தது. இந்த வழக்கில் மாதவன் செட்டியார் மற்றும் மாரப்பன் செட்டியார் அனுபவத்தில் சொத்துக்கள் இருந்ததை காண்பிக்க பட்டா தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர்களது சொத்திற்கான பட்டா எண்களை குறிப்பிட இயலுமா என்றால் இயலும். அந்த பட்டா எண் 317 ஆகும். இரண்டு பேருக்கும் ஒரே பட்டா தான் இருந்தது என்றும் அதன் எண் 317 என்பதை நான் வழக்கின் பிராதில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். நான் வழக்கில் அவ்வாறு குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாதவன் செட்டியார் எந்த தேதியில் இறந்தார் என்றும் மாரப்பன் செட்டியார் எந்த தேதியில் இறந்தார் என்றும் சொன்னால் மாதவன் செட்டியார் 15-11-1945 ம் தேதியன்றும், மாரப்பன் செட்டியார் 20-10-1985 ம் வருடமும் இறந்தார்கள். மாதவன் மற்றும் மாரப்பன் செட்டியார் உயிருடன் இருந்த காலம் வரை மேற்படி சொத்துக்கள் அவர்களது சுவாதீனத்தில் இருந்தது என்பதைக் காட்டுவதற்கு ஏதேனும் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டா தாக்கல் செய்துள்ளேன். வேறு ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை. ஆனால் சொத்து வரி ரசீதுகள் என்னிடம் உள்ளது. என் வசமுள்ள ஆவணங்களை என்னால் தாக்கல் செய்ய இயலுமா

என்றால் இயலும். மாதவன் செட்டியார் மற்றும் மாரப்ப செட்டியார் ஆகியோர்கள் உயிருடன் இருந்த காலம் வரை அவர்கள் மேற்படி சொத்தின் சுவாதீனத்தில் இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. மாதவன் செட்டியார் மற்றும் மாரப்ப செட்டியார் ஆகியோர்களின் வாரிசுகள் ஒன்று சேர்ந்து கிரயம் ஒப்பந்தம் போட்ட விவரம் தெரியுமா என்றால் கிரயம் ஒப்பந்தம் போட்டோம் ஆனால் அதை ரத்து செய்து விட்டோம். யாருடன் கிரய ஒப்பந்தம் போட்டோம் என்றால் முருகேசன் ,பழனிச்சாமி, காளியப்ப கவுண்டர், கனகராஜ், சண்முகம் ஆகியோர்களுடனும் வேறு மூன்று நபர்களுடனும் போட்டோம். அவர்களது பெயர் ஞாபகமில்லை. நான் மேற்படி விவரத்தை நான் வழக்குரையிலும் முதல் விசாரணை பிரமாணப் பத்திரத்திலும் கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. எந்த தேதியில் கிரய ஒப்பந்தம் போட்டோம் என்பதையும் எத்ந தேதியில் அதை ரத்து செய்தோம் என்ற விவரத்தையும்  என்னால் குறிப்பிட்டு கூற இயலுமா என்றால் இயலாது. கிரய ஒப்பந்தப்படி எவ்வளவு விலை பேசப்பட்டது, அதில் எவ்வளவு முன்பணமாக கொடுக்கப்பட்டது எவ்வளவு காலக்கெடு கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை நான் வழக்குரையிலும் முதல் விசாரணை பிரமாண பத்திரத்திலும் நான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். கிரய ஒப்பந்தம் போட்டது அதை ரத்து செய்த ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். அது என் வசமுள்ளது. அதை தாக்கல் செய்ய இயலும்.

குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க ஒத்தி வைக்கப்படுகிறது,

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது,

G BHARATHI PRABHA

Digitally signed by G BHARATHI PRABHA
Date: 2021.11.12 12:49:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி

திருப்பூர்.